<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case DVC.No. 1/2024 RW– 1

| | |
|---|---|
| Name | : கார்த்திக் (1ம் எதிர்மனுதாரர்) |
| Father's/Husband's Name | : கருணாநிதி |
| Village | : சமுத்திராபட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 37 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of June 2026

**மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் ஆஜர். 2, 3 எதிர்மனுதாரர்கள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.**

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் இவ்வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் ஆவேன். வழக்கு பற்றிய விபரங்கள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு அதில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1) 29.12.2021ம் தேதியிட்ட அன்னை வேளாங்கண்ணி டெஸ்ட் டியூப் பேபி சென்டிரில் IP final bill நகல் – எ.ம.சா.ஆ.2 ஆகவும்,

2) ஸ்ரீஹரி மருத்துவமனையில் மனுதாரர் சிகிச்சை மேற்கொண்டதற்கான மருத்துவ அறிக்கை – நகல் – எ.ம.சா.ஆ.3 ஆகவும்,

3) 17.06.2016, 19.04.2021 தேதிய ஆண்டவர் ஜுவல்லரியில் நகை வாங்கிய ரசீதுகள் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) – எ.ம.சா.ஆ.4 ஆகவும், (மேற்படி ஆவணத்தில் சமுத்திராபட்டி கருணாநிதி என்று வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்பதாலும், மேற்படி ஆவணம் இந்த வழக்கிற்கு தொடர்புடைய ஆவணம் இல்லை என்றும் தெரிவித்து ஆவணம் குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.)

4) 17.05.2019 தேதிய பாத்திமா ஜுவல்லரியில் நகை வாங்கிய ரசீதுகள் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) – எ.ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன். (சமுத்திராபட்டி அருவி என்று வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்பதாலும், மேற்படி ஆவணம் இந்த வழக்கிற்கு தொடர்புடைய ஆவணம் இல்லை என்றும் தெரிவித்து ஆவணம் குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபணைகள் குறித்து வழக்கின் இறுதியில் தீர்மானிக்கப்படும்.)

மேற்கண்ட ஆவணங்கள் எ.ம.சா.ஆ.2 முதல் எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்